இணை இயக்குநர் (கைத்தறி) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : **திரு.கி. கிரிதரன், இணை இயக்குநர் (கைத்தறி)**
கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகம், சென்னை.

-----

**ந.க.எண்.14680/2020/இ2-1** **நாள்.28.08.2021.**

பொருள்: நிர்வாகம் – கைத்தறி மற்றும் துணிநூல் துறை – 2018–2019 மற்றும் 2019–2020ஆம் ஆண்டுகளுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் கலந்தாய்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்தி ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடிதம், எண்.2380/PSD-I/2020, நாள். 30.05.2020.
2. சென்னை, கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ஆணை, ந.க.எண். 14680/2020/இ2, நாள்.14.08.2020.

-----

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2018–2019 மற்றும் 2019–2020ஆம் ஆண்டிற்கான தொகுதி –IVக்குட்பட்ட நேரடி நியமன தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களுக்கு பார்வை (2)ல் காணும் செயல்முறை ஆணையின் வாயிலாக பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

2) மேற்படி பணிநியமனம் செய்யப்பட்ட தனியர்களில், கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர்களின் பணியானது, மேற்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, கலம் எண். 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் இளநிலை உதவியாளர் பணி நிலையில் வரன்முறைப்படுத்தப்பட்டு ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | இளநிலை உதவியாளர்களின் பெயர் திரு / திருமதி / செல்வி | தற்போது பணிபுரிந்து வரும் அலுவலகம் | வரன்முறைப் படுத்தப்படும் தேதி |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | கோ. கார்த்தி | கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகம். | 28.08.2020 மு.ப |
| 2. | பெ. லோகேஸ்வரன் | கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகம். | 21.08.2020 மு.ப |
| 3. | ஆர். பூபதி | கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகம். | 28.08.2020 மு.ப |

2..

| வ. எண். | இளநிலை உதவியாளர்களின் பெயர் திரு / திருமதி / செல்வி | தற்போது பணிபுரிந்து வரும் அலுவலகம் | வரன்முறைப் படுத்தப்படும் தேதி |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 4. | ஆ. சுமலதா | கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகம். | 21.08.2020 மு.ப |
| 5. | ஆர். ரமேஷ் | கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகம். | 21.08.2020 மு.ப |

3) மேற்காணும் தனியர்களை இளநிலை உதவியாளர் பணிநிலையில் பணிவரன்முறைப்படுத்தப்பட்டது என்பது தொகுதி-IV பணிநிலையில் 2018-19 மற்றும் 2019-2020ஆம் ஆண்டிற்கான நேரடி நியமனம் தொடர்பாக, சென்னை / மதுரை கிளை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள ரிட் மனு வழக்கின் தீர்ப்பின் முடிவிற்கு உட்பட்டதாகும் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

4) மேற்கண்ட பத்தி எண் 2ல் காணும் அட்டவணையில் கலம் எண்.2ல் கண்ட தனியரின் தகுதிகாண் பருவமானது இளநிலை உதவியாளர் பணிநிலையில் கலம் எண்.4ல் குறிப்பிட்டுள்ள நாள் முதல் தகுதிகாண் பருவ தொடக்க நாளாக கணக்கிடப்பட்டு ஆணையிடப்படுகிறது. மேலும், மேற்கண்ட தனியர்கள் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவம் முடிக்கப்படவேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஒம்/-
இணை இயக்குநர் (கைத்தறி)

30/08/2021
இணை இயக்குநர் (கைத்தறி)-க்காக
30.08.2021

பெறுநர்

சம்மந்தப்பட்ட தனியர்கள்.

நகல்

1) சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை.
2) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-3.
3) ஆணையரக "அ" பிரிவு
4) பணிப்பதிவேடு.
5) இருப்புக்கோப்பு.